**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,இலுப்பூர்**

**முன்னிலை : திருமதி. M.சாதத்துனிஷா, பி.ஏ.பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
இலுப்பூர்.

2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 23ம் நாள் செவ்வாய் கிழமை

ஆண்டு பட்டிகை வழக்கு எண் 105/2026

**(CNR.NO.TNPD12-000559-2026)**

| | | |
|---|---|---|
| 1. | Name of the Court | District Munsif Cum Judicial Magistrate Court, Iluppur |
| 2. | Name of the Judge | Tmt.M.Sathathunisha, BA.BL., |
| 3 | Date of Judgment | 23.06.2026 |
| 4. | Case Number along with CNR Number | **CC-105/2026,TNPD12-000559-2026)** |
| 5. | Name of the Parties of the case | The Inspector of Police, Iluppur - **Complainant** |
| | | Perumal<br>**Accused** |
| 6. | Date of Occurence | 01.02.2026 |
| 7. | Date of Complaint | 01.02.2026 |
| 8. | Date of Arrest if any and remand | 01.02.2026 |
| 9. | Period of Remand of the Accused | ---- |
| 10. | Date if release on bail | 01.02.2026 |
| 11. | Date of Final Report | 18.05.2026 |

<table>
<tr><td>12.</td><td>Date of Committal of the case to the Court of Sessions</td><td>-</td></tr>
<tr><td>13.</td><td>Date of Questioning of the accused U/s. 251 of Code of Criminal Procedure</td><td>16.06.2026</td></tr>
<tr><td>14.</td><td>Date of Examination in Chief and Cross Examination of the witnesses</td><td><table><tr><td>Witnesses</td><td>Chief</td><td>Cross</td></tr><tr><td>PW 1</td><td>16.06.2026</td><td>16.06.2026</td></tr><tr><td>PW 2</td><td>16.06.2026</td><td>16.06.2026</td></tr></table></td></tr>
<tr><td>15.</td><td>Date of filing of all miscellaneous petitions and their results including the results on Challenge before the Superior courts except routine petitions like petition U/s. 317 of the code</td><td>--</td></tr>
<tr><td>16.</td><td>Date of Examination of the Accused U/s. 313 of the Code</td><td>16.06.2026</td></tr>
<tr><td>17.</td><td>Details of abscondence of an accused and his appearance/production as the case may be</td><td>Nil</td></tr>
<tr><td>18.</td><td>Grant of Stay by Superior courts and the results there of</td><td>--</td></tr>
<tr><td>19.</td><td>Date of Commencement of Trial</td><td>16.06.2026</td></tr>
<tr><td>20.</td><td>Date of Closure of Trial</td><td>16.06.2026</td></tr>
<tr><td>21.</td><td>Date of Sentence of Order</td><td>23.06.2026</td></tr>
<tr><td>22.</td><td>Date of Service of Copy of Judgment to the Accused</td><td>------</td></tr>
<tr><td>23.</td><td>If any delay, give Explanation</td><td>---</td></tr>
</table>

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
இலுப்பூர் காவல் நிலையம்,
காவல் நிலைய குற்ற எண்: 26/2026

.... குற்றமுறையிடுபவர்

//எதிர்//

பெருமாள்,
த/பெ.ராமன்,
களர்ப்பட்டி,
முல்லையூர் Po,
இலுப்பூர் தாலுகா,
புதுக்கோட்டை மாவட்டம். ..... குற்றம் சாட்டப்பட்டவர்

இவ்வழக்கானது, என் முன்பாக கடந்த 16.06.2026 அன்று இறுதியான விசாரணைக்கு வந்த பொழுது அரசுத்தரப்பில் அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும். குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ரெங்கசாமி அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதங்களைக் கேட்டும் ஆவணங்களை பார்வையிட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :**

இவ்வழக்கில், கடந்த 01.02.2026ம் தேதி 13.20 மணிக்கு, இலுப்பூர் காவல் நிலைய சரகத்தில் உள்ள எதிரி, கலர்பட்டி மயான பாதை அருகே 180 ML அளவுள்ள Mens Club Brandy Bottle 26 மதுப்பாட்டில்களை எவ்விதமான அரசு அனுமதியின்றி விற்பனை செய்து குற்றம் புரிந்துள்ளார் என்றும், எனவே எதிரியின் செய்கையானது பிரிவு 4(1)(C) TNP ACT ன் கீழ் குற்றம் புரிந்ததாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்த வழக்கு குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு அழைப்பாணை அனுப்பட்டது. குற்றம்சாட்டப்பட்டவர்கள் முன்னிலையானவுடன் அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பிரிவு 230 BNSS -ன் கீழ் இலவசமாக

வழங்கப்பட்டது.

3. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்த போது இவ்வழக்கில் எதிரியின் மீது பிரிவு **பிரிவு 4(1) (c) TNP Act-ன்** படி, குற்றச்சாட்டுகள் வனைய போதிய முகாந்திரம் இருந்ததினால் 263 (2) BNSS -ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் விளக்கி வினவிய போது குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி இல்லை என்று குற்றச்சாட்டை மறுத்தும் வழக்கு விசாரணை வேண்டினர். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் அ.சா.1, அ.சா.2 ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5) <u>அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்-</u>**

(i) அ.சா.1 அர்சுன்குமார் (இரண்டாம் நிலை காவலர்) தனது சாட்சியத்தில், கடந்த 01.02.2026ம் தேதி 13.20 மணிக்கு இலுப்பூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் தானும், காவல் நிலைய ஆய்வாளர் கலா, இரண்டாம்நிலைக் காவலர் 2304 திரு.செல்வகுமார் அவர்களும் ரோந்து பணிக்கு சென்றிருந்தோம் என்றும், அப்போது உடையாம்பட்டி, சாங்கிராப்பட்டி, மலைக்குடிப்பட்டி ஆகிய பகுதிகளில் ரோந்து பணியில் இருந்த போது, கலர்பட்டி அருகே தங்களை பார்த்ததும் ஓட முயற்சித்த நபரை பிடித்த விசாரித்த போது அவர் தனது பெயர் பெருமாள் த/பெ ராமன் என கூறினார் என்றும், அவர் 180ml அளவுகொண்ட Mens club Brandy என்று லேபில் ஒட்டிய 26 மதுபாட்டிகல்களை விற்பனைக்காக கள்ளத்தனமாக எதிரி வைத்திருந்தார் என்றும், அவரை காரணம் கூறி கைது செய்து, நிலையம் கொண்டுவந்தோம் என்றும், அவரிடம் இருந்த மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டது. என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், மொத்தம் 26 மது பாட்டில்கள் சம்பவ இடத்தில் கொட்டி அழிக்கப்பட்டு அழித்தல் மகஜர் தயார் செய்தோம் என்றும், அழித்தல் மகஜரில் தான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் அழித்தல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையது தான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

ii) அ.சா.2 துரைராஜ் (சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்) தனது கூடுதல் சாட்சியத்தில், கடந்த 01.02.2026 ம் தேதி 13.20 மணிக்கு காவல் ஆய்வாளர் திருமதி.கலா மற்றும் இரண்டாம் நிலைக் காவலர்கள் 740 திரு.அர்சுன்குமார் மற்றும் 2304 திரு.செல்வகுமார் ஆகியோர்களுடன் உடையாம்பட்டி, சாங்கிராப்பட்டி, மலைக்குடிப்பட்டி ஆகிய பகுதிகளில் ரோந்து பணிக்கு செல்லும் போது கிடைத்த இரகசிய தகவலின் பேரில், கலர்பட்டி அருகே பெருமாள் த/பெ.ராமன் என்பவர் எந்தவித அரசு அனுமதியும் இல்லாமல் சுயலாபத்திற்காக 180ml அளவுகொண்ட Mens club Brandy என்று லேபில் ஒட்டிய 26 மதுபாட்டில்களை லாபம் அடையும் நோக்கத்திற்காக வைத்திருந்ததை பறிமுதல் செய்து, எதிரி மீது காவல் நிலைய குற்ற எண்.26/2026 பிரிவு 4(1)(C) TNP Act-ன் கீழ் அச்சு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கையின் அசல் நீதித்துறை நடுவர் இலுப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைத்து வழக்குக் கோப்பினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளார் என்றும், பின்பு 01.02.2026ம் தேதி 13.40 மணிக்கு 180ml அளவுகொண்ட Mens club Brandy என்று லேபில் ஒட்டிய 26 மதுபாட்டிகளை இரண்டாம் நிலைக் காவலர்கள் 740 திரு.அர்சுன்குமார் மற்றும் 2304 திரு.செல்வகுமார் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியுள்ளார் என்றும், பின்னர் அதே சாட்சிகளின் முன்னிலையில் மதுபாட்டில்களில் உள்ள மதுபானங்களை அழித்தல் மகஜர் மூலம் அழித்துள்ளார் என்றும், இவ்வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், எதிரியை கடந்த 01.02.2026ம் தேதியன்று கலர்பட்டி அருகே 13.30 மணிக்கு குற்றக்காரணம் கூறி கைது செய்து, எதிரியையும், வழக்குச் சொத்தையும், நிலையம் கொண்டு வந்து, அன்றைய தினமே தக்க நிலைய பிணையில் விடுவித்துள்ளார் என்றும், இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து, எதிரிக்கு எதிராக பிரிவு 4(1)(C) TNP Actன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும், இவ்வழக்கின் பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களில் குற்றம்சாட்டப்பட்டவருக்கு பாதகமான சங்கதிகளை குறித்து BNSS 351 (1) (a)ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டவரிடமிருந்து எடுத்துக் கூறி விளக்கி வினவிய போது, அரசு தரப்பு சாட்சியம் பொய் என்று கூறியுள்ளனர். மேலும் தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்றும் கூறினர்.

6. குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை.

7. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு அரசுத் தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

**தீர்வு**

1) இருதரப்பும் கேட்கப்பட்டது.ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அரசு தரப்பு வழக்கானது கடந்த 01.02.2026ம் தேதி 13.20 மணிக்கு, இலுப்பூர் காவல் நிலைய சரகத்தில் உள்ள எதிரி, கலர்பட்டி மயான பாதை அருகே 180 ML அளவுள்ள Mens Club Brandy Bottle 26 மதுப்பாட்டில்களை எவ்விதமான அரசு அனுமதியின்றி விற்பனை செய்து குற்றம் புரிந்துள்ளார் என்றும், எனவே எதிரியின் செய்கையானது பிரிவு 4(1)(C) TNP ACT ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

2) இதனைக் குறித்து அரசு தரப்பு சாட்சியங்களை பரிசீலனை செய்த்ததில், அ.சா1, அ.சா 2 ஆகிய சாட்சிகள் மேற்படி அரசு தரப்பு வழக்கை ஒத்துரைத்து, தங்களது முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ள போதிலும், இவ்வழக்கின் புகார்தாரரும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவருமான அ.சா 2 இலுப்பூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் என்பதும், அவரது காவல் நிலையத்தை சேர்ந்த காவலர் அ.சா 1 என்பதும் தெரியவருவதாலும், மேற்கண்ட சாட்சிகளின் நம்கபத்தன்மை குறித்து பரிசீலனை செய்ய வேண்டியது அவசியம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

3) அந்த வகையில், அ.சா.1ன் குறுக்கு விசாரணையை பரிசீலனை செய்ததில், அ.சா 1 தனது குறுக்கு விசாரணயில், இரகசியத்தகவல் எத்தனை மணிக்கு கிடைத்தது என்றால் அதுப்பற்றி தனக்குத் தெரியவில்லை என்றும், கலர்பட்டி மயான பாதை என்பது பொதுமக்கள் அதிகம் நடமாடும் பகுதி என்றால் சரிதான் என்றும், வழக்குச் சொத்துக்களை

புகைப்படம் எடுத்து அதனை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான் என்றும், இந்த வழக்கில் பார்வைமகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான் என்றும், கலர்பட்டி மயான பாதை அருகே இருந்த நபர்களிடம் சாட்சி கையொப்பம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான் என்றும், மேலும், எதிரியிடம் காவல் உதவி ஆய்வாளர் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினாரா என்றால் நியாபகம் இல்லை என்றும், கலர்பட்டி மயான பாதை அருகில் வைத்து தான் தன்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான் என்றும், அந்த இடத்தில் தான் நீங்கள் கையொப்பம் செய்தீர்கள் என்றால் சரிதான் என்றும், பொதுவாக நீதிமன்றத்தில் வழக்குச் சொத்துக்களை ஒப்படைத்த பிறகு தான் அதை அழிக்க உத்தரவு பெற்று, அழிக்க வேண்டும் என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளனர்.

மேலும், அ.சா.2 தன்னுடைய குறுக்குவிசாரணையில், வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் இடத்தில் எதிரியிடம் இருந்து வேறு எந்தபொருட்களும் கைப்பற்றபடவில்லை என்றால் சரிதான் என்றும், தான் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வழக்கு சொத்து அரசு மதுபான பாட்டில்கள் என்றால் சரிதான் என்றும், மேற்சொன்ன மதுபாட்டில்கள் எந்த மதுபான கடையில் இருந்து வாங்கப்பட்டது என்பதை விசாரித்து அந்த மதுபான கடையில் ஊழியர்களை விசாரித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் என்றும், வழக்குச்சொத்துக்களை எந்த இடத்தில் அழிக்கப்பட்டது என்றும், யார் முன்னிலையில் அழிக்கப்பட்டது என்றும், புகைப்படம் எடுத்து சான்றாவணமாக குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான் என்றும், எதிரியை கைது செய்யும்போது, பொதுமக்கள் யாரும் இருந்தார்களா என்றால் இருந்தார்கள் என்றும், சாட்சியம் அளிக்க முன்வரவில்லை என்றும், காவலர்களை எந்த இடத்தில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பெறப்பட்டது என்றால் காவல்நிலையத்தில் விசாரித்து வாக்குமூலம் பெறப்பட்டது என்றும்,

மேலும், வழக்குச்சொத்துக்களை கைப்பற்றும்போது, பொதுமக்களை விசாரித்து சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் அப்போது அந்த இடத்தில் யாரும் இல்லை என்றும்,

இவ்வழக்கில் பார்வைமகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்கண்ட அ.சா 1, அ.சா 2 ஆகிய சாட்சியங்களிலிருந்து அவர்களது சாட்சியங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டு காணப்படுகிறது என்பதும், இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி அழித்தல் மகஜர் தயார் செய்யும்போது, அதற்கான புகைப்படங்களை எடுத்து இந்த வகையான மதுபான பாட்டில்கள்தான் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டது என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி புகைப்படங்களை சான்றாவணங்களாக தாக்கல் செய்து நிரூபிக்கவில்லை என்பதும், பார்வை மகஜர் மற்றும் வரைபடம் இவ்வழக்கில் தாக்கல் செய்து சம்பவ இடத்தை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்பதும், மதுபான பாட்டில்களை விற்பனைக்காக வைத்திருந்ததாக சொல்லும் நிலையில், மது விற்றதாக சொல்லும் பணத்தை எதிரியிடம் இருந்து கைப்பற்றப்படவில்லை என்பதும், பொதுமக்கள் யாரையும் இவ்வழக்கில் தனிநபர் சாட்சியாக விசாரிக்கவில்லை என்பதும், பொதுமக்களை சாட்சியாக இருக்க கேட்டு, அந்த சாட்சி அவ்வாறு சாட்சியாக இருக்க மறுத்துவிட்டார்கள் என்பதை குறிப்பிட்டு அ.சா 2 இறுதியறிக்கையில் கூறவில்லை என்பதும், அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களுக்கு இடையே ஒன்றுக்கொன்று முரண்பாடு காணப்படுகிறது என்பது தெரியவருகிறது.

எனவே, அ.சா.1, அ.சா.2 ஆகிய சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் இந்த குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக குற்றச்சாட்டினை அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என்றும், இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவரை குற்றவாளி இல்லை என முடிவு செய்வதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று முடிவு செய்து, இவ்வழக்கிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவரை விடுதலை செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இறுதியாக, அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில், எதிரி மீது சுமத்தப்பட்ட BNS **பிரிவு 4(1) (c) TNP Act-ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து குற்றம் சாட்டப்பட்டவரை பிரிவு 271(1) BNSS-ன் கீழ் விடுதலை** செய்து இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கின் தன்மையை கருதி, பிரிவு 396 BNSS -ன் படி இவ்வழக்கில் மாவட்ட சட்ட பணிகள் ஆணை குழுவிற்கு இழப்பீட்டிற்காக பரிந்துரை செய்ய வேண்டியதில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் ஆஜர்படுத்தப்படவில்லை. அரசுத்தரப்பில் சுமார் 180 ML அளவுள்ள Mens Club Brandy Bottle 26 மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டு, பின்னர் மேற்படி 26 பிராந்தி பாட்டில்களும் அழித்தல் மகஜர் மூலம் அழிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 23ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

M SATHATHUNISHA
Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.06.23 13:42:29 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

**அரசுத் தரப்புச் சாட்சிகள்**

அ.சா.1.அர்சுன்குமார் (இரண்டாம் நிலை காவலர்)
அ.சா.2.துரைராஜ் (சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்)

**Judicial Form No:68**

| S.No of the exhibit | Description of the exhibits | Date when the exhibit was filed in the case | How marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | கைப்பற்றுதல் மகஜரில் முதலாவது கையொப்பம் மட்டும் | 16.06.2026 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2. | அழித்தல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் | 16.06.2026 | அ.சா.ஆ.2 | அ.சா.1 | அசல் |
| 3. | முதல் தகவல் அறிக்கை | 16.06.2026 | அ.சா.ஆ.3 | அ.சா.2 | அசல் |
| 4. | கைப்பற்றுதல் மகஜர் | 16.06.2026 | அ.சா.ஆ.4 | அ.சா.2 | அசல் |
| 5. | அழித்தல் மகஜர் | 16.06.2026 | அ.சா.ஆ.5 | அ.சா.2 | அசல் |

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** ... இல்லை

**சான்றுபொருள் :** - இல்லை.

M SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.06.23 13:42:35 +0530

ஒம்/M.சதத்துனிஷா

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
இலுப்பூர்.

**குறிப்பு-**

1. தீர்ப்பு பற்றிய விபரம் காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது,
2. இவ்வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையிலிருந்தார்.
3. இவ்வழக்கின் சாட்சிகள் யாரும் 3 வாய்தாவிற்குமேல் விசாரணைக்காக நிறுத்தி வைக்கப்படவில்லை.
4. இவ்வழக்கின் முடிவு குறித்து சிறு குறிப்பு காவல் துறையினருக்கு வழங்கப்பட்டது.

//உண்மை நகல்//

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
இலுப்பூர்.